# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 141/2019/மா
ஆணை நாள்: 17–02–2020

**15.08.2019 நாளிட்ட காலச்சக்கரம் பத்திரிக்கை செய்தி.** --- **தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவுசெய்தது.**

**ஆணையர், வேலூர் மாநகராட்சி.** --- **எதிர் மனுதாரர்**

2019, ஆகஸ்ட் 15 நாளிட்ட காலச்சக்கரம் பத்திரிக்கையில் வெளியான செய்தினை இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவு செய்து முறையீட்டு மனு எண்.141/மா/2019 என எண்ணிடப்பட்டு அறிக்கை பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை:**

2019, ஆகஸ்ட் 15 நாளிட்ட காலச்சக்கரம் பத்திரிக்கையில் வேலூர் மாநகராட்சியில் தி சென்னை சில்க்ஸ் நிறுவனம் நீர்நிலைகளை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளது என்றும், பார்க்கிங் வசதி இல்லாததால் வாகனங்கள் சாலையில் நிறுத்தப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது என்றும், நீர்நிலைகளை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டுபவர்கள் மீதும் அதற்கு துணை போன அரசு அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வேலூர் மாநகராட்சி அலுவலர்கள் இம்மாதிரியான நீர்நிலைகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுப்பதில்லை என்றும், சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் தி சென்னை சில்க்ஸ் நிறுவனம் பாட்டை கால்வாயை ஆக்கிரமித்து பிரமாண்டமான கட்டடம் எடுப்பியுள்ளது என்றும், அதாவது 7 ஆயிரம் சதுர அடி நிலத்தை ஆக்கிரமித்துள்ளது என்றும், மழைநீர் செல்லும் பாதையை அடைத்து அதன்மீது கார் ஸ்டான்ட் அமைந்துள்ளது என்றும், அந்த இடம் ஹரீஷ் ஸ்புட் சோன் என்ற நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், வேலூர் மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் திரு. கண்ணன் இதுபோன்ற தடையங்களை மறைத்து அனுமதி வழங்கியுள்ளார் என்றும், வேலூர் மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்காமல் தயக்கம் காட்டி வருகிறதென்றும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இம்பத்திரிக்கை செய்தி தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 09.09.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்பட்டது. அதன்படி வேலூர் மாநகராட்சி ஆணையர் தனது 04.11.2019 நாளிட்ட அறிக்கையில் இப்பொருள் தொடர்பாக மாநகராட்சியில் அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்றும், புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள கால்வாயினை ஆக்கிரமித்து எந்தவிதமான கட்டுமானமும் தரை மேல் கட்டவில்லை என்றும், சென்னை பெங்களூரு சாலையில் அனுமதியின்றி கட்டப்பட்ட நான்கு கட்டிடங்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி இடத்தில் கார் நிறுத்தம் அமைக்க இவ்வலுவலக கட்டிட அனுமதி எண்.035/நட/2018/00868 நாள்: 29.9.2018-ன்படி வழங்கப்பட்டுள்ளது என்றும், வாகன நிறுத்துமிடத்தில் ஹரீஷ் புட் சோன் என்ற புரவிஷன் ஸ்டோர்ஸ் விதிகளுக்கு முரணாக அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், பத்திரிக்கையில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. பத்திரிக்கையில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதை போல் பல்வேறு கட்டிடங்கள் அனுமதியின்றியும், விதி மீறியும், நீர் நிலைகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது என்பது அறிக்கையின் வாயிலாக கண்டறியப்படுகிறது. இவ்வாறான அனுமதியின்றியும் விதி மீறியும், நீர் நிலைகள் மற்றும் பொது இடங்களை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் மீது அவ்வப்போது மாநகராட்சி அலுவலர்கள் முறையாக தொடர் கள ஆய்வு செய்யப்படுவதில்லை என்பது உறுதியாகிறது. இம்மாதிரியான உரிய அனுமதியின்றியும், விதிகளை மீறியும் கட்டப்பட்டுள்ள கட்டங்களை கண்டறிந்து உரிய விதிமுறைகளின்படி தாமதமின்றி நடவடிக்கவும் மேற்கொள்ளவும், இம்மாதிரியான கட்டடங்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 17-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, இவ்வலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலர்.

பெறுநர்
ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
**இ. கோ. / உதரி**